**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 152/2019 |
| Name | : Gowtham Vinayak |
| P.W. | : 5 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.08.2025

**எதிரிகள் 1 மற்றும் 2 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது உடுமலைப்பேட்டையில் தனியாக மருத்துவம் பார்த்து வருகிறேன். கடந்த **13.10.2018** ம் தேதி உடுமலை அரசு மருத்துவமனையில் பணிபுரிந்த போது மதியம் **01.00** மணி அளவில் மாரிமுத்து என்பவர் தன்னை அன்று மதியம் **12.00** மணி அளவில் தன் வீட்டின் அருகே தெரிந்த நபர் அடித்துவிட்டதாக வீரபாண்டி என்பவரால் சிகிச்சைக்கு அழைத்து வரப்பட்டார். அவரை பரிசோதித்ததில் அவருக்கு **1.** மூக்கில் ரத்தக் கசிவு இருந்தது **2.** நெற்றி பகுதியில் சாறு காயம் இருந்தது **3.** வாந்தி எடுத்தார் அதனால் அவரை மேல் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அங்கு அவரை பரிசோதித்த போது மூளையில் ரத்தக் கசிவு இருந்ததாக கருத்துறு பெறப்பட்டதால் அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன். **13.10.2018 தேதியிட்ட விபத்து பதிவேடு அ.சா.ஆ. 4 மற்றும் காயச் சான்று அ.சா.ஆ.5**

**ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/-Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்